# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness – PW22

| | | | |
|---|---|---|---|
| Name | : பச்சியண்ணன் | Caste | : |
| S/o. | : பழனிசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 29.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A2 present. A1 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் காமலாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். 22.12.2014ம் தேதி காலை 9.00 மணிக்கு மேல் ரமேஷ் போன் செய்து தனக்கும் அவரது மனைவிக்கும் மற்றும் தாயாருக்கு சந்தியூர் பிரிவு அருகில் விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார். டிப்பர் லாரி வந்து தாங்கள் சென்ற பஸ்சில் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். அதனால் நானும் துரைசாமியும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு ரமேசின் மனைவி பூர்ணிமா தலை நசுங்கி வயிறு கிழிந்து கை,கால் அடிபட்டு இறந்துகிடந்தார்.

அவருடைய அம்மா அடிபட்டு இறந்துகிடந்தார். ரமேசிற்கு அடிபட்டு இருந்தது. அவர் நடக்கக்கூடிய நிலையில் இருந்தார். பின்னர் இறந்த நபர்களை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லும்போது ரமேசும் உடன் சென்றார். போலிசார் சம்பவ இடத்தில் பூர்ணிமாவின் பிரேதத்தை வைத்து பிரேத விசாரணை செய்தார்கள். பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

எனக்கு தகவல் தெரிந்து காமலாபுரத்திலிருந்து அரை மணி நேரத்தில் சந்தியூருக்கு சுமார் 10.00 மணிக்கு சென்றுவிட்டேன் என்றால் சரி. ரமேஷ் எனக்கு மைத்துனர் முறை ஆவார். சாட்சி துரைசாமிக்கும் ரமேஷ் மைத்துனர் என்றால் சரி. நாங்கள் இருவரும்தான் ஒன்றாக காமலாபுரத்திலிருந்து சென்றோம். சம்பவ இடத்தில் ஆம்புலன்சில் பூர்ணிமாவின் பிரேதம், அலமேலு, ரமேஷ் ஆகியோரை கூட்டிக்கொண்டு எந்த மருத்துவமனைக்கு வந்தோம் என்றால் சேலம் அரசுமருத்துவமனைக்கு வந்தோம். சம்பவத்தில் உயிரிழந்த மற்றவர்களின் பிரேதமும் வந்திருந்தது என்றால் சரி. நான் அன்று முழுவதும் நான் சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தேன் என்றால் சரி. என்னுடன் துரைசாமியும் அன்று முழுவதும் என்னுடன் இருந்தார் என்றால் சரி. போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் பிரேத பரிசோதனையின்போது அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். சந்தியூர் பிரிவிலும் என்னை விசாரித்தார்கள். நான் சொன்னவாறு எந்த சம்பவத்தையும் நான் கேள்விப்பட்டு சம்பவ

இடத்திற்கு போகவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/– S.Sumathy,
Principal Sessions Judge, Salem.